Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிறு, ஆகஸ்ட் 23, 2026 | இதழ் 132

## சென்னையின் பெருமையைப் போற்றும் இந்நன்னாளில் அனைவருக்கும் எனது இனிய "சென்னை நாள்" நல்வாழ்த்துகள்: முதலமைச்சர் விஜய்



சென்னை, 23 ஆகஸ்ட் 2026: 'சென்னை நாள்' இன்று கொண்டாடப்படுவதை யொட்டி முதலமைச்சர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது; "வரலாற்றின் தடங்களைச் சுமந்தும், நவீனத்தின் வேகத்தோடு பயணித்து, தமிழகத்தின் தலைநகராகத் திகழும் நம் சென்னையின் பெருமையைப் போற்றும் இந்நன்னாளில் அனைவருக்கும் எனது இனிய "சென்னை நாள்" நல்வாழ்த்துகள்!

வரலாற்றுச் சிறப்பும், பண்பாட்டுப் பெருமையும், கல்வி, மருத்துவம், தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறப்பான வளர்ச்சியும், உழைப்பும், புதுமையும் சங்கமிக்கும் நகரமாக சென்னை விளங்குவதோடு, பல்வேறு மொழி, இன, பண்பாடுகளைச் சேர்ந்த மக்களை அரவணைத்து, அனைவருக்கும் வாய்ப்புகளை வழங்கும் மாநகரமாகவும் திகழ்கிறது.

சென்னையின் வரலாற்றுப் பெருமையையும் பண்பாட்டு அடையாளங்களையும் பாதுகாத்து, நவீன உட்கட்டமைப்புகளுடன் கூடிய உலகத் தரம் வாய்ந்த சீர்மிகு பெருநகராக சென்னையை மேலும் உயர்த்துவோம். அனைவருக்கும் சமவாய்ப்பும், பாதுகாப்பான சூழலும், வளமான வாழ்வும் கிடைத்திட உறுதியேற்போம்.

வளரட்டும் சென்னைப் பெருநகரம்! உயரட்டும் மக்களின் வாழ்க்கைத்தரம்!" என தெரிவித்துள்ளார்.

## தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தமிழகத்தைச் சேர்ந்த இருவர் தேர்வு: முதலமைச்சர் விஜய் வாழ்த்து!

சென்னை 23, ஆகஸ்ட் 2026: தேசிய நல்லாசிரியர் விருதிற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள தமிழகத்தைச் சேர்ந்த புளியம்பட்டி தங்கராஜ், மதுரை அமுதா ஆகியோருக்கு முதலமைச்சர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார். மேலும் இதுகுறித்து முதலமைச்சர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது;

"ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, இந்தியக் குடியரசுத் தலைவரால் வழங்கப்படும் தேசிய நல்லாசிரியர் விருதிற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டின் புளியம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஆசிரியர் தங்கராஜ் மற்றும் மதுரை, பிஎம் ஸ்ரீ கேந்திரிய வித்யாலயா பள்ளி ஆசிரியை அமுதா ஆகியோருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைக்கும் உன்னதப் பணியை மேற்கொண்டு வரும் தங்களின் அர்ப்பணிப்பு, புதுமையான கற்பித்தல் முறைகள் மற்றும் மாணவர் நலனில் கொண்ட அக்கறைக்கு கிடைத்துள்ள இந்த உயரிய அங்கீகாரம், தமிழ்நாட்டின் கல்விச் சிறப்புக்கும், ஒட்டுமொத்த ஆசிரிய சமூகத்திற்கும் மேலும் பெருமை சேர்க்கிறது.




இந்த தேசிய விருது தங்களின் பணிக்கு மேலும் ஊக்கமளித்து, எண்ணற்ற மாணவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றட்டும்! நல்வாழ்த்துகள்!" என தெரிவித்துள்ளார்.

## நீர்மூழ்கி எதிர்ப்புப் போர் நடவடிக்கைகளுக்கான ஆழ்கடல் அல்லாத பகுதிகளில் பயன்படுத்தப்படும் கப்பலான மங்ரோல் கடற்படையிடம் ஒப்படைப்பு

சென்னை 23, ஆகஸ்ட் 2026: கொச்சியில் உள்ள கொச்சின் கப்பல் கட்டுமான நிறுவனத்தால் கட்டப்பட்ட, நீர்மூழ்கி எதிர்ப்புப் போர் நடவடிக்கைகளுக்கான ஆழ்கடல் அல்லாத பகுதிகளில் பயன்படுத்தப்படும் கப்பலான மங்ரோல், 2026 ஆகஸ்ட் 21 அன்று இந்தியக் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தக் கப்பல் 80 சதவீதத்திற்கும் அதிகமான உள்நாட்டுத் தயாரிக்கப்பட்ட பாகங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது நீருக்கடியில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளவும், கடலோரப் பகுதிகளில் நீர்மூழ்கி எதிர்ப்புப் போர் நடவடிக்கைகள், குறைந்த தீவிரத்தன்மை கொண்ட கடல்சார் செயல்பாடுகள், கண்ணிவெடி எதிர்ப்புப் போர் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு திறன்களைக் கொண்டுள்ளது. வாட்டர்ஜெட் தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் இக்கப்பலில், அதிநவீன டார்பிடோக்கள், நீர்மூழ்கி எதிர்ப்பு ராக்கெட்டுகள்,மேம்பட்ட ரேடார் அமைப்புகள், சோனார்கள் ஆகியவை பொருத்தப்பட்டுள்ளன.



இந்தக் கப்பலுக்கு, குஜராத் மாநிலம் ஜூனாகத் மாவட்டத்தில் உள்ள மங்ரோல் என்ற கடலோர நகரம், சிறிய துறைமுகத்தின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த நகரம் கடல்சார் மீன்பிடித் தொழிலுக்கு ஒரு முக்கிய மையமாகத் திகழ்கிறது. மேலும், 2004 வரை, சேவையில் இருந்த இந்தியக் கடற்படையின் கண்ணிவெடி அகற்றும் கப்பலான பழைய ஐஎன்எஸ் மங்ரோல் கப்பலின் பாரம்பரியத்தை இந்தக் கப்பல் கொண்டுள்ளது.

இதன் மூலம், சிறப்பான போர்க் கப்பல்களின் பெயர்களைத் தொடர்ந்து பயன்படுத்தும் கடற்படையின் மரபு நிலைநிறுத்தப்பட்டு வருகிறது.

## பேச்சுவார்த்தை தோல்வியால் வர்த்தக போர் வெடித்தது; கனடாவிற்கு 50% கூடுதல் வரி விதித்தது அமெரிக்கா: பதிலடி தருவோம் பிரதமர் மார்க் எச்சரிக்கை

சென்னை, 23 ஆகஸ்ட் 2026: அமெரிக்கா மற்றும் கனடா இடையேயான வர்த்தக பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததால், இரு நாடுகளுக்கு இடையே கடுமையான பொருளாதார மோதல் உருவாகியுள்ளது. அமெரிக்காவுக்கும் அதன் அண்டை நாடான கனடாவுக்கும் இடையே நீண்டகாலமாக வர்த்தக உறவுகள் நீடித்து வந்த நிலையில், அண்மைக்காலமாக வரி விதிப்பு தொடர்பான மோதல்கள் தீவிரமடைந்து வந்தன. இந்த விவகாரத்திற்கு சுமுக தீர்வு காணும் வகையில் இருதரப்பு பேச்சுவார்த்தைக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் 3 நாட்கள் கூடுதல் கால அவகாசம் வழங்கி இருந்தார். எனினும், இரு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு இடையே நடந்த இறுதி கட்ட வர்த்தக பேச்சுவார்த்தை எந்தவித உடன்பாடும் எட்டப்படாமல் திடீரென முறிந்தது.

இதன் காரணமாக கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் 2,000 கோடி அமெரிக்க டாலர் மதிப்பிலான பல்வேறு பொருட்களுக்கு 50 சதவீதம் கூடுதல் வரி விதிக்க அமெரிக்க அரசு அதிரடியாக முடிவு செய்துள்ளது. இந்த வரி விதிப்பானது கனடா நாட்டில் இருந்து அமெரிக்காவுக்கு ஆண்டுதோறும் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் சுமார் 5 சதவீதத்தை நேரடியாக பாதிக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.



இதுகுறித்து பேசிய அமெரிக்க வர்த்தக பிரதிநிதி ஜேமிசன் கிரீர், 'அமெரிக்க சந்தையில் கனடாவுக்கு சிறந்த வாய்ப்புகளை வழங்க முன்வந்தும், அவர்கள் கடைசி நேரத்தில் புதிய நிபந்தனைகளை விதித்து ஒப்பந்தத்தில் இருந்து பின்வாங்கியதால் அமெரிக்காவுடன் கைகோர்க்கும் வரலாற்று சிறப்புமிக்க பொருளாதார வாய்ப்பை கனடா இழந்துவிட்டது' என்று தெரிவித்தார்.

இதற்கு உடனடியாக கடும் எதிர்வினையாற்றியுள்ள கனடா பிரதமர் மார்க் கார்னி, 'அமெரிக்கா முன்மொழிந்த கடைசி நேர மாற்றங்கள் நியாயமற்றவை மற்றும் பொருளாதார ரீதியாக ஏற்றுக் கொள்ள முடியாதவை. அமெரிக்காவின் இந்த அநீதியான கூடுதல் வரி விதிப்புக்கு பதிலடியாக டாலருக்கு டாலர் என்ற அடிப்படையில் கனடாவும் அமெரிக்க பொருட்கள் மீது பதில் வரி விதிக்கும்; எங்கள் நாட்டு தொழிலாளர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு அரசு முழு பாதுகாப்பு அளிக்கும்' என்று தெரிவித்தார்.

## சீரான அரசியல், தொடர் சீர்திருத்தங்களால் உலக அரங்கில் ஒளிரும் இந்தியா: பிரதமர் மோடி பெருமிதம்

சென்னை 23, ஆகஸ்ட் 2026: ஆங்கில நாளேடு ஒன்று டெல்லியில் நேற்று நடத்திய உலகத் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு பிரதமர் மோடி பேசியதாவது: பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும், உலகப் பொருளாதாரத்தின் பிரகாசமான மையமாக இந்தியா திகழ்கிறது. இந்தியாவில் நிலையான அரசியல் மற்றும் கொள்கைத் தொடர்ச்சி நிலவுவதால், உலக நாடுகள் இந்தியாவை வளர்ச்சியின் நம்பிக்கை நட்சத்திரமாகப் பார்க்கின்றன.

அனைத்துத் துறைகளிலும் சீர்திருத்தங்களை மேற்கொள்வதில் எங்கள் அரசு உறுதியாக உள்ளது. முந்தைய அரசுகளின் 'லைசென்ஸ் ராஜ்' நடைமுறைகள் வேலையில்லாத் திண்டாட்டத்தையே அதிகரித்தன. மக்களை அடிப்படைத் தேவைகளுக்காகவும் அரசிடம் கையேந்தும் நிலையிலேயே அவர்கள் வைத்திருந்தனர். ஆனால், நாங்கள்



உற்பத்தியை ஊக்குவிக்கும் திட்டங்கள் மூலம் புதிய வாய்ப்புகளை உருவாக்கி வருகிறோம்.

சட்டத்தால் வெளிப்படையாகத் தடை செய்யப்பட்டிருந்தால் ஒழிய, மற்ற அனைத்திற்கும் அனுமதி என்ற புதிய கொள்கை அணுகுமுறையைச் செயல்படுத்தி வருகிறோம். எல்லையோர உள்கட்டமைப்பு நமது பலவீனமல்ல, அதுவே நாட்டின் பலம் என நிரூபித்துள்ளோம். இன்று உலகில் மிகக் குறைந்த விலையில் டேட்டா சேவையும், சிறந்த மொபைல் போன்களும் இந்தியாவில் மட்டுமே கிடைக்கின்றன. இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.



தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி

ஞாயிறு,
ஆகஸ்ட் 23, 2026

## மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் 'நைரா'வை அறிமுகப்படுத்துகிறது - இயற்கையான ரத்தின கற்கள் பதிக்கப்பட்ட நகைகளின் புதிய கலெக்சன்

சென்னை, 23 ஆகஸ்ட் 2026: உலகின் நான்காவது மிகப் பெரிய ஜுவல்லரி ரீடெய்லர் மற்றும் 'தி ரெஸ்பான்சிபிள் ஜுவல்லர்' என அறியப்படும் மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் 'Nayraa – Nature's Finest Gemstones, Crafted into Timeless Masterpieces' என்ற புதிய இயற்கையான ரத்தின கற்கள் பதிக்கப்பட்ட நகைகளின் நகை கலெக்சனை அறிமுகப்படுத்தியுள்ளது. பிரபல நடிகையும் மாடலுமான ஸ்ரீநிதி ஷெட்டி இந்த கலெக்சனின் முகமாக இடம் பெற்றுள்ளார்.

ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, தமிழ் நாடு மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் நடைபெறும் ஜெம்ஸ்டோன் ஜுவல்லரி ஃபெஸ்டிவல்-ன் முக்கிய அம்சமாக 'Nayraa' கலெக்சன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விழாவின் ஒரு பகுதியாக, வாடிக்கையாளர்கள் ஜெம்ஸ்டோன் & அன்கட் ஜுவல்லரி மீது சேதாரத்தில் 25% வரை தள்ளுபடி பெறலாம். இந்த சலுகை 14 செப்டம்பர் 2026 வரை செல்லுபடியாகும்.

இயற்கையின் அரிய ரத்தினங்களின் நீடித்த அழகால் ஈர்க்கப்பட்டுள்ள 'Nayraa' கலெக்சன், பாரம்பரிய Chillai மற்றும் Pachi craftsmanship ஆகியவற்றிலிருந்து உத்வேகம் பெற்றுள்ளது. தங்கத்தில் வடிவமைக்கப்பட்டு, விலைமதிப்பு மிக்க இயற்கையான ரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள இந்தத் தொகுப்பு, சிற்ப வடிவங்கள் மற்றும் நுணுக்கமான வேலைப்பாடுகளை ஒருங்கிணைத்து, பாரம்பரிய ரத்தின நகைகளுக்கு புதிய பரிமாணத்தை வழங்குகிறது.




'Nayraa' கலெக்சன் இயற்கையான ரத்தின நகைகளை நவீன வடிவமைப்பு அணுகுமுறையுடன் அறிமுகப்படுத்துகிறது. இதன் Craftsmanship, தனித்துவம் மற்றும் அழகியல் சிறப்பம்சங்களை புதிய தலைமுறை வாடிக்கையாளர்களுக்கு எடுத்துச் செல்லும் வகையில் இந்த கலெக்சன் உருவாக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய நகை தயாரிப்பு நிபுணத்துவத்தை வளர்ந்து வரும் design sensibilities மற்றும் consumer preferences உடன் இணைக்கும் மலபார் கோல்டு & டைமண்ட்ஸ்-ன் அணுகுமுறையை இந்தத் தொகுப்பு பிரதிபலிக்கிறது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 'Nayraa' கலெக்சனுடன், ஜெம்ஸ்டோன் ஜுவல்லரி ஃபெஸ்டிவல்-ன் ஒரு பகுதியாக மலபார் கோல்டு & டைமண்ட்ஸ்-ன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜெம்ஸ்டோன் மற்றும் அன்கட் ஜுவல்லரி கலெக்சன்களும் காட்சிப் படுத்தப்படுகின்றன. வாடிக்கையாளர்கள் இந்தப் பிரிவை அறிந்து ஆராயும் வகையில் கஸ்டமர் ஃபோகஸ்ட் பையிங் எக்ஸ்பீரியன்ஸ்-ம் வழங்கப்படுகின்றன.

## "இளைஞர்களுக்கு முதல்வர் விஜய் மிகப் பெரிய உத்வேகம்"- நடிகை சுமித்ரா தேவி!

சென்னை 23, ஆகஸ்ட் 2026: தனது பள்ளி காலத்திலேயே நடிப்பின்மீது ஆர்வம் கொண்டவர் சுமித்ரா. தீவிரம், கண்ணியம் மற்றும் உணர்வுப்பூர்வமான கண்ணகி கதாபாத்திரம் ஏற்று பள்ளி மேடையில் நடித்தது, அவரது நடிப்புப் பயணத்திற்கு ஆரம்பப் புள்ளியாக அமைந்தது. குரோம்பேட்டையில் உள்ள வைஷ்ணவ் கல்லூரியில் விஷுவல் கம்யூனிகேஷன் படித்துள்ள சுமித்ரா பரத நாட்டியத்தில் தேர்ந்தவர். இந்த நடனப் பயிற்சி, முகபாவனைகள் மற்றும் உடல் மொழி ஆகியவை அவருக்கு இயல்பான ஆளுமையையும் பாராட்டுகளையும் பெற்று தந்தது.

'மொத ராத்திரி' திரைப்படத்தில் கீர்த்தி என்ற கதாபாத்திரத்திற்கு தேவையான வசீகரம் மற்றும் அமைதியை தனது நடிப்பில் கொண்டு வந்துள்ளார் சுமித்ரா, நடிகைகள் நந்திதா தாஸ் மற்றும் ஐஸ்வர்யா ராஜேஷ் போலவே சுமித்ராவின் மாநிற அழகும் தனித்திறமையும் திரையில் அவருக்கு கூடுதல் வசீகரத்தை கொடுத்துள்ளது. அதிகப்படியான அலங்காரம் தேவையில்லாமலேயே பார்வையாளர்களைக் கவரக்கூடிய மண் சார்ந்த தோற்றம் அவரிடம் உள்ளது. அதேபோல, சுமித்ராவின் தெளிவான தமிழ் உச்சரிப்பும் ரசிகர்களை வெகுவாக கவர்ந்துள்ளது. அவர் பேசும் எளிய வசனங்கள்கூட அவரை தனித்து காட்டுகிறது.

நடிகர் விஜய்யின் தீவிர ரசிகை தான் என்கிறார் சுமித்ரா. விஜய்யின் திரை வசீகரம், ஒழுக்கம் மற்றும் ரசிகர்களுடன் இணையும் திறன் ஆகியவற்றால் பெரிதும் ஈர்க்கப்பட்டுள்ளார். இளைஞர்களுக்கு விஜய் மிகப்பெரிய உத்வேகம் என்கிறார். அதேபோல், நடிகை தமன்னா பாட்டியாவின் நடனத்தையும் அவர் மிகவும் ரசிக்கிறார்.



ஒரே திரைப்படத்தில் பல புதிய முகங்களுக்கு வாய்ப்பு வழங்கி அவர்களுக்கு ஒரு சிறந்த தளத்தை உருவாக்கி, உற்சாகமளித்த மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனத்திற்கு சுமித்ரா நன்றி தெரிவித்துள்ளார். 'மொத ராத்திரி' திரைப்படத்தின் மூலம் தனது திரைப்பயணத்தைத் தொடங்கியிருப்பது தனது அதிர்ஷ்டம் என்கிறார்.

பள்ளி மாணவியாக கண்ணகி கதாபாத்திரத்தில் நடித்ததிலிருந்து 'மொத ராத்திரி' திரைப்படத்தின் கீர்த்தியாக சுமித்ராவின் பயணம் இப்போது தான் தொடங்கியுள்ளது. அவரது மாநிற அழகு, முகபாவனைகள், நடனத் திறமை மற்றும்தமிழ் உச்சரிப்பு போன்றவை தமிழ் திரைத்துறைக்கு மற்றுமொரு திறமையான நடிகை கிடைத்துவிட்டதை சுட்டிக் காட்டுகிறது.

'மொத ராத்திரி' திரைப்படத்தை ராஜா கருப்பசாமி இயக்கியிருக்கிறார். மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரித்திருக்கும் இப்படத்தில், சுமித்ரா தேவி முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

## டெல்லி ஜந்தர் மந்தரில் சாதி அடிப்படையிலான இடஒதுக்கீட்டுக்கு எதிராக விடியவிடிய போராட்டம்: கோஷமிட்ட 50 பேர் கைது; ஜாமர் கருவியை நிறுவி இணையம் முடக்கம்

சென்னை, 23 ஆகஸ்ட் 2026: டெல்லி ஜந்தர் மந்தரில் சாதி அடிப்படையிலான இடஒதுக்கீட்டு முறைக்கு எதிராக நூற்றுக்கணக்கானோர் திரண்டு திடீர் போராட்டத்தில் ஈடுபட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. நாடு முழுவதும் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் வழங்கப்பட்டு வரும் சாதி அடிப்படையிலான இடஒதுக்கீட்டு முறை தொடர்பாக பல்வேறு விவாதங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், சமூக வலைதளமான இன்ஸ்டாகிராம் பக்கத்தில் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று, தலைநகர் டெல்லியில் உள்ள ஜந்தர் மந்தர் பகுதியில் நூற்றுக்கணக்கானோர் நேற்று திடீரென திரண்டனர். இவர்கள் கைகளில் பதாகைகள், சுவரொட்டிகள் மற்றும் கொடிகளை ஏந்தியபடி தற்போதைய இடஒதுக்கீட்டு முறைக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.

இந்த போராட்டத்திற்கு போலீசார் முறையான அனுமதி அளிக்காத காரணத்தால், துணை ராணுவப் படையினருடன் இணைந்து அப்பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்தப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் 5 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து வலியுறுத்தினர். குறிப்பாக, சாதியை முதன்மையாகக் கொள்ளாமல் குடும்பத்தின் பொருளாதார நிலையை அடிப்படையாக வைத்தே சலுகைகளும் இடஒதுக்கீடும் வழங்கப்பட வேண்டும் என்று கோரினர். மேலும், தற்போதைய இடஒதுக்கீட்டு கொள்கையை மறுஆய்வு செய்து அதன் பலன்கள் உண்மையான அடித்தட்டு மக்களுக்கு சென்று சேர்கிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும் என்றும், சலுகைகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதை தடுக்க 'கிரீமிலேயர்' முறையை விரிவுபடுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

அத்துடன் பட்டியலினத்தவர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான சட்ட திட்டங்கள் மற்றும் உயர்கல்வி கொள்கைகள் குறித்து விரிவான மறுஆய்வு நடத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். போராட்டத்தில் ஈடுபட்ட நிர்வாகி ஒருவர் கூறுகையில், 'சாதி வேறுபாடின்றி ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் கல்வி, பயிற்சி மற்றும் பிற தேவைகளுக்கான அரசு உதவிகள் தடையின்றி சமமாக கிடைக்க வேண்டும்' என்று தெரிவித்தார். இதனிடையே அனுமதியின்றி போராட்டம் நடத்திய 50 பேரை போலீசார் அங்கிருந்து அப்புறப்படுத்திகைது செய்தனர்.

மேலும் அப்பகுதிக்கு வந்தவர்களை போலீசார் தீவிர சோதனைக்கு உட்படுத்திய நிலையில், சமூக வலைதள பயன்பாட்டை தடுக்கும் வகையில் அங்கு இணையதளத்தை முடக்கும் ஜாமர் கருவிகள் வைக்கப்பட்டதாக போராட்டக்காரர்கள் குற்றம்சாட்டியதால் அப்பகுதியில் தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவியது. இந்த திடீர் போராட்டத்தையொட்டி டெல்லி போலீசார் அப்பகுதியில் பலத்த தடுப்புகளை அமைத்து தீவிர பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

தங்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு உடனடியாக பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், வரும் நாட்களில் இந்த போராட்டத்தை மிகப்பெரிய அளவில் தீவிரப்படுத்துவோம் என்று போராட்டக்காரர்கள் எச்சரித்து உள்ளனர்.

## தொகுதி மறுவரையறை தீர்மானத்தில் தவெக உறுதியுடன் இருக்க வேண்டும்: திருமாவளவன் வலியுறுத்தல்

சென்னை 23, ஆகஸ்ட் 2026: சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தொகுதி மறுவரையறை தீர்மானத்தில் தவெக உறுதியுடன் இருக்க வேண்டும் என எம்பி திருமாவளவன் கூறினார்.

திருவண்ணாமலையில் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் அளித்த பேட்டி: மாநில சுயாட்சி என்பது திமுக முன்மொழிந்த மகத்தான கோரிக்கை, கோட்பாடு. அதனை, மீண்டும் விசிக உரத்து பேசுகிறது. சட்டமன்றத்தில் ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடைபெற வேண்டும். தனிநபர் விமர்சனங்களை மேடையில் வைத்துக் கொள்ளலாம். அதுதான் ஆரோக்கியமானது. சட்டமன்றத்தில் எம்எல்ஏக்கள் தங்களுடைய கடமையை ஆற்ற வேண்டும் என்பது என் விருப்பம். அவை குறிப்பில் இருந்து நீக்கியவற்றை, சமூக ஊடகங்களில் வெளியிடுவதை தடை செய்ய வேண்டும்.

சட்டமன்ற நேரடி ஒளிபரப்பை வரவேற்கிறோம். எம்எல்ஏக்கள் பொறுப்புணர்ந்து செயல்பட இது உதவும். பாஜகவை எப்போது திமுக எதிர்க்க வேண்டுமோ, அப்போது எதிர்க்கும் என்பது என் நம்பிக்கை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கார்



வழங்குவதை வரவேற்கிறோம்.

வரும் தேர்தல்களிலும் தவெகவுடன் விசிக இணைந்தே பயணிக்கும். தென் மாநில முதல்வர்கள் மாநாட்டில், சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் முதல்வர் விஜய் அழுத்தம் கொடுத்து பேசி இருக்க வேண்டும் என்பது எங்களுடைய எதிர்பார்ப்பு. ஆனால், அவர் பின்வாங்கியதாக நான் கருதவில்லை. தென் மாநிலங்கள் பாதிக்காத வகையில் தொகுதி மறுவரையறை அமைய வேண்டும் என்று கருத்தை பதிவு செய்திருக்கிறார். ஆனால், கூட்டணி கட்சித் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களை கலந்து ஆலோசித்து, சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தின் நிலைப்பாட்டில் தவெக உறுதியாக இருக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி

## தலைமைச் செயலாளர் மீது அதிருப்தி: தமிழக அரசைக் கண்டித்து போராட்டம் தவெக அரசுக்கு நாங்கள் வேண்டுமா? அதிகாரிகள் வேண்டுமா? மார்க்சிஸ்ட் செயலாளர் சண்முகம் கேள்வி

சென்னை 23, ஆகஸ்ட் 2026: தவெக அரசுக்கு நாங்கள் வேண்டுமா? அதிகாரிகள் வேண்டுமா? என மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் பெ. சண்முகம் கேள்வி எழுப்பினார்.

கம்யூனிஸ்ட் கட்சியினரின் விவரங்களைச் சேகரிக்க உத்தரவிட்ட விவகாரம் தொடர்பாக குஜிலியம்பாறை வட்டாட்சியர் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். தலைமைச் செயலர் சாய் குமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில்தான் குறிப்பிட்ட கட்சியின் உறுப்பினர்களைக் கண்காணிக்க முடிவெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதையடுத்து தலைமைச் செயலருக்கு எதிராக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் இன்று சென்னை பனகல் மாளிகை அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் மாநிலச் செயலர் பெ. சண்முகம் பேசியதாவது:

இடதுசாரி மாணவர் மற்றும் இளைஞர் அமைப்புகளின் செயல்பாடுகளை முடக்கவும், போராட்டத்தில் ஈடுபடும் மாணவர்களை ஒடுக்கவும் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் பிறப்பித்துள்ள உத்தரவு வன்மையான கண்டனத்திற்குரியது.

எங்களுடைய மாணவர்களிடம் இருக்கும் ஒழுக்கத்தை நீங்கள் எங்கும் பார்க்க முடியாது. கடந்த ஜூலை மாதம் 28-ம் தேதி, தலைமைச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற சட்டம்-ஒழுங்கு குறித்த கூட்டத்தில் இத்தகைய முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவின் அடிப்படையில், கல்லூரி கல்வி ஆணையர் மற்றும் உயர்கல்வித்துறைச் செயலாளர் ஆகியோர் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்குச் சுற்றறிக்கைகளை அனுப்பியுள்ளனர்.

ஒரு ஜனநாயக நாட்டில் இது போன்றதொரு சம்பவம் இந்தியாவிலேயே வேறு எங்கும் நடைபெற்றது இல்லை. தலைமைச் செயலாளரின் இந்த நடவடிக்கை முற்றிலும் சட்டவிரோதமானது. ஜனநாயகத்திற்கும் அரசியல் சாசனத்திற்கும் விரோதமாகச் செயல்படும் அவர், தலைமைச் செயலாளர் என்ற உயர் பதவியில் நீடிப்பதற்கு தகுதியுமற்றவர்.

ஆகவே, 'தமிழக அரசு உடனடியாக அவரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும்' என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

சாய் குமார் ஐஏஎஸ் இங்கு நியமிக்கப்பட்டவர் அல்ல. தேர்தல் ஆணையத்தால் நியமனம் செய்யப்பட்டவர். அவருக்கு ஏன் பதவி நீட்டிப்பு வழங்க வேண்டும். அவரை பதவி நீக்கம் செய்துவிட்டு உங்களுக்கு வேண்டிய ஒரு நபரை நிரந்தர தலைமைச் செயலாளராக நியமியுங்கள். யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம். ஆனால் சாய்குமார் ஐஏஎஸ் வேண்டாம். உயர்கல்வி ஆணையர் ஒரு சுற்றறிக்கை அனுப்பி அவரிடம் விசாரணை நடக்கிறது. அதேபோல சாய்குமார் ஐஏஎஸ் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். சாய்குமாருக்கும் நோட்டீஸ் அனுப்புங்கள்.

முதல்வர் பதில் சொல்ல வேண்டும்

தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் அதிகாரிகள் இருக்கிறார்களா? அல்லது அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் அரசு இருக்கிறதா? இதற்கு முதல்வர் பதில் சொல்ல வேண்டும்.

வேறு யாரும் விளக்கம் கொடுக்க முடியாது. இந்த பிரச்னையில் யார் காரணமோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தவறு செய்த வட்டாட்சியர், உயர்கல்வி ஆணையர், தலைமைச் செயலர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த ஆட்சி தொடர்வதற்கு கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆதரவு கொடுத்திருக்கிறது. இதைத் தெரியாதவரா மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர்.

கம்யூனிஸ்டுகள் ஆதரவு கொடுத்ததால் தான் இந்த அரசு நீடிக்கிறது என்று தெரிந்தபிறகும் இடதுசாரிகள் மீது இந்த உள்நோக்கத்தோடு சுற்றறிக்கை அனுப்பப்படுகிறது என்று சொன்னால் அதிகாரிகளை வைத்துக்கொண்டு ஆட்சி நடத்தப் போகிறீர்களா? அல்லது இடதுசாரிகளை வைத்துக்கொண்டு ஆட்சியைத் தொடரப் போகிறீர்களா? இதுதான் அடிப்படையான கேள்வி. இந்த நடவடிக்கைகளை நாங்கள் சகித்துக்கொள்ள முடியாது. இந்த பிரச்னை தீர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

## வங்கதேச பிரதமர் டெல்லி வருகை ரத்து? ஜனாதிபதி மாளிகையில் முழு ஒத்திகை நடக்காது என்ற அறிவிப்பால் பரபரப்பு



சென்னை, 23 ஆகஸ்ட் 2026: வங்கதேசத்தில் பதவி நீக்கப்பட்ட பிரதமர் ஷேக் ஹசீனாவை நாடு கடத்த வேண்டும் என்று இந்தியாவுக்கு வங்கதேசம் கோரிக்கை விடுத்து வருகிறது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் சிக்கல் இருந்து வருகிறது. செப்டம்பர் மாதம் 12 மற்றும் 13ம் தேதிகளில் பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள வங்க தேச பிரதமருக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால், வங்க தேச பிரதமர் இந்தியா வருவது சந்தேகம் என்று அந்நாட்டில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில், தாரிக் ரஹ்மானின் இந்திய பயணத்தையொட்டி அவருக்கு பாரம்பரிய முறையில் வரவேற்பு அளிக்கும் விதமாக ஜனாதிபதி மாளிகையில் இன்று முழு ஒத்திகை நடைபெறும் என்றும் இதனால் வழக்கமாக நடைபெறும் வாராந்திர காவலர் மாற்று அணிவகுப்பு நிகழ்ச்சி ரத்து செய்யப்படுவதாக ஜனாதிபதி மாளிகை நேற்று அறிவிப்பு வெளியிட்டிருந்தது.

இந்த அறிவிப்பு வெளியாகி சில மணி நேரங்களுக்கு பின் ஜனாதிபதி மாளிகையில் இன்று நடத்த திட்டமிடப்பட்டிருந்த முழு ஒத்திகை ரத்து செய்யப்படுவதாக ஜனாதிபதி மாளிகை வெளியிட்டுள்ள அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒத்திகை ரத்து செய்யப்பட்ட அறிவிப்பு, வங்கதேசப் பிரதமரின் பயணம் ரத்தாகி விடவே அதிக வாய்ப்பு இருப்பதாக கூறப் படுகிறது.

## அமைச்சர் நிர்மல் குமார் பேச்சிற்கு கழக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களது பதிலடி

சென்னை, 23 ஆகஸ்ட் 2026: தவெக அரசு அமைந்த பிறகு ஆட்சி நடத்துவதை விட எதிர்க்கட்சிகள் மீது வழக்கு பதிவு செய்வதில் தான் சிறப்பு கவனங்களை செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் ஒரு வழக்கல்ல 10 வழக்குகள் அல்ல எத்தனை வழக்குகள் போட்டாலும் அதை சந்திப்பதற்கும் , சட்டப்படி எதிர்கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

ஒரு சட்டமன்றத்தினுடைய நிகழ்வு என்பது ஆரோக்கியமான விவாதம் நடக்க வேண்டும். நாட்டினுடைய நிலைகளை குறித்து சட்டமன்றம் நடைபெறுகின்ற பொழுது உறுப்பினர்கள் கேள்வி எழுப்புவதும் அதற்கு சம்பந்தப்பட்ட துறைகளைச் சார்ந்த அமைச்சர்கள் பதில் சொல்வதும் முதலமைச்சர் பதில் சொல்வதும் இதுவரை இருந்த ஒரு நடைமுறை.

ஆனால் இன்றைய தவெக அமைச்சர்கள் எதிர் கட்சிகள் கேட்கக்கூடிய கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாமல் பதில் தெரியாமல் வேறு விதமாக அவர்கள் அந்த பதில்களை சொல்லி அந்த இடத்தில் ஒரு கூச்சல் குழப்பத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளை முன்னெடுக்கின்றார்கள்.

நான் நேற்று என்ன கேட்டேன். மின்சாரத் துறை அமைச்சரிடம் 18 ஹார்ட் டிஸ்க் காணாம போயிடுச்சு கண்டு பிடிச்சது 38 ஹார்ட் டிஸ்க்ன்னு சொன்னீங்க மீதி இருக்கற 20 ஹார்ட் டிஸ்க் எங்க இருந்து கண்டுபிடிச்சது உரிய விளக்கம் என்ன.? என கேள்வி கேட்டா அது கடைசி வரைக்கும் அவர் பதிலே சொல்லல. திரும்பவும் ஒரு கேள்வி கேட்டேன் நீங்க வெள்ளை அறிக்கையில திமுக ஆட்சியில எங்களுடைய முதலமைச்சராக இருந்த திராவிட மாடல் ஆட்சியினுடைய நாயகர் மாண்புமிகு தளபதி அவர்கள் முன்னெடுத்த திட்டங்களை வெள்ளை அறிக்கையிலே சுட்டி காட்டி இருக்கறீங்க 99000 மின்மாற்றிகள் மாற்றப்பட்டிருக்கின்றன புதிதாக திமுக ஆட்சியில் அமைக்கப்பட்டிருக்கின்றன 2020-21 ல 14500 கோடி இருந்த மின்வாரியத்தினுடைய ஓராண்டு கடன் கடந்த 2025-26 ல 933 கோடியாக குறைக்கப்பட்டிருக்கிறது. என்பதை வெள்ளை அறிக்கையிலே சொல்லி இருக்கீங்க ஆக முழுசா வெள்ளை அறிக்கையில திமுக அரசின் சாதனைகளை பட்டியலிட்டு சொல்லிவிட்டு நேற்று சட்டமன்றத்தில் வந்து திமுக ஆட்சியில் எந்தவிதமான பணிகளும் நடக்கல என்கிறது போல ஒரு தோற்றத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளை முன்னெடுத்தாங்க. நான் அததான் கேள்வியா கேட்டேன், நீங்களே வெள்ளை அறிக்கையிலே சொல்லிருக்கீங்கன்னு இப்ப அதுக்கு பதில் சொல்லணும். அதுக்கு சட்டமன்றத்தில் பதில் சொல்வதை விட்டுவிட்டு வேறு விதமான வார்த்தைகளை பயன்படுத்துவது இது போன்ற நிகழ்வுகளை சில அமைச்சர்கள் சட்டமன்றத்தில் முன்னெடுக்கின்றார்கள்.

ஒரு கேள்விக்கு பதில் தெரியாமல் சட்டமன்றத்தில் பதிலளிக்க திறமை இல்லாமல் திராணி இல்லாமல் இதுபோன்ற குதர்க்கமான வார்த்தைகளை பயன்படுத்தி சட்டமன்றத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். மக்கள் பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றார்கள். உரிய நேரத்தில் மக்கள் அவர்களுக்கு உரிய பதிலை தருவார்கள்.

ஒரு முதலமைச்சர் தான் எடுத்துக்கொண்ட பதவி பிரமாணம் என்னனங்கிறது என்ன? யார்கிட்டயும் எதுவும் மறைக்க மாட்டேன். உண்மையா நேர்மையா நடந்துக்கிறன் தானே அவருடைய உறுதிமொழியில பதவியே ஏற்று இருக்கார். அப்ப கையில இருந்தா நீங்க வெளியிட வேண்டியது தானே.?

எந்த துறையில் தவறு நடந்தது எவ்வாறான தவறு நடந்தது? யார் தவறு செய்தார்கள்? அவர்கள் மீது நாங்கள் வழக்கு பதிவு செய்கிறோம். அப்படி நடவடிக்கை எடுக்க வேண்டியது தானே.? இதுல என்ன நேரம் காலம் ஜோசியம் பார்த்து நேரம் காலங்கம் பார்த்தா அத வெளியிட முடியும். அதான் எங்களுடைய எதிர்கட்சித் தலைவர் மிக தெளிவாக சொன்னார். அப்படி ஏதேனும் உங்களிடம் இருந்தால் வெளியிடுங்கள் என்று நேற்று கேட்டார் இப்ப வரைக்கும் அவங்க வெளியிடல. மூணு பைல் கட்டி வச்சிருக்கு முடிச்சு போட்டு வச்சிருக்கு அந்த பைல அவுத்தாருனா வெளியில வந்துரும்னு சொன்னவங்க 24 மணி நேரம் ஆச்சு நேற்றே அதை வெளியிட வேண்டியதுதான அவங்ககிட்ட இருந்தா தானே வெளியிட முடியும். இந்த ஆட்சி 100 நாள் கடந்து போயிருக்கு மக்களுக்கு எந்தவிதமான ஒரு பயனும் இல்லாத அரசாக இந்த தவெக அரசு உள்ளது.

## தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி அமெரிக்க பயணத்திற்கு ஒன்றிய அரசு அனுமதி மறுப்பு



சென்னை, 23 ஆகஸ்ட் 2026: தெலங்கானா மாநில முதல்வர் ரேவந்த் ரெட்டி காங்கிரஸ் செயற்குழு கூட்டத்தில் பங்கேற்பதற்காக டெல்லி சென்றிருந்தார். அங்கிருந்து கடந்த 19ம் தேதி புறப்பட்டு லண்டன் சென்றார். இந்நிலையில் லண்டனில் இருந்து முதல்வர் அமெரிக்கா செல்வதாக தகவல் வெளியானது. இதற்கு மத்திய அரசு அனுமதி வழங்க மறுப்பு தெரிவித்து உள்ளது. இதுகுறித்து வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் டெல்லியில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அதில் இதற்கு முன்பு முதலமைச்சர் ரேவந்த் ரெட்டியின் பிரிட்டன் பயணத்திற்கு ஒன்றிய அரசு அனுமதி அளித்துள்ளது. முன்மொழியப்பட்ட நிகழ்ச்சி நிரலானது, பயணத்தின் நிலை மற்றும் நோக்கத்திற்கு ஏற்ப அமைய வேண்டும். ஆனால் தெலங்கானா மாநில முதல்வர் ரேவந்த் ரெட்டியின் அமெரிக்க பயணத்தின் நோக்கம் தெளிவாக இல்லை. இதனால் அவரது அமெரிக்க பயணத்திற்கு ஒன்றிய அரசு அனுமதி வழங்க மறுப்பு தெரிவித்துள்ளது.

இவ்வாறு அவர் கூறி உள்ளார். இதையடுத்து முதல்வர் ரேவந்த் ரெட்டி இங்கிலாந்து பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியா திரும்பி விடுவார். ஆனால், தெலங்கானா அரசுக்குழு பிரிட்டன் பயணத்தை முடித்துக் கொண்டு அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொள்ளும். இந்தக் குழு, பல்வேறு பல்கலைக்கழகங்களைப் பார்வையிட்டு, தெலங்கானாவில் உயர்கல்வி மற்றும் விளையாட்டுத் துறையின் வளர்ச்சி குறித்து விவாதிக்கும்.

## வண்ணாரப்பேட்டை காவல் மாவட்டத்தில் 16 வயது சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்து, தங்கநகை மற்றும் பணம் திருடிச் சென்ற வழக்கில் குற்றவாளிக்கு 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.3,000/- அபராதம் விதித்து நீதிமன்றம் தீர்ப்பு

சென்னை, 23 ஆகஸ்ட் 2026: 2021ம் ஆண்டு வண்ணாரப் பேட்டை காவல் மாவட்டத்தில் வசித்து வந்த 16வயது சிறுமிக்கு ஒருவர் பாலியல் தொந்தரவு கொடுத்து, சிறுமியின் வீட்டிலிருந்த தங்க நகைகள், பணம் மற்றும் செல்போன் ஆகியவற்றை திருடிச் சென்றது தொடர்பாக, டபிள்யு-13 வண்ணாரப் பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில், போக்சோ, திருட்டு உள்ளிட்ட சட்டப்பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டு, இவ்வழக்கில் தொடர்புடைய 31 வயது (2021ம் ஆண்டு) எதிரியை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினர்.

டபிள்யு-13 வண்ணாரப்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினரால் இவ்வழக்கு முறையாக விசாரிக்கப்பட்டு, இறுதி அறிக்கை தயார் செய்து, சென்னை, உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள போக்சோ வழக்குக்கு சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில், நீதிமன்ற விசாரணை முடிவடைந்து நேற்று முன்தினம் (21.08.2026) இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவ்வழக்கில் தொடர்புடைய 31 வயது எதிரி மீது குற்றம் நிரூபிக்கப்பட்டதால், மேற்படி 31 வயது (2021ம் ஆண்டு) குற்றவாளிக்கு, மொத்தம் 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.3,000/- அபராதமும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் ஒரு மாதம் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் கனம் நீதிபதி அவர்கள் தீர்ப்பு வழங்கினார்.

மேற்படி வழக்கில் சிறப்பாக புலனாய்வு செய்து, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி சாட்சிகளை ஆஜர் படுத்தி, தொடர்ச்சியான நடவடிக்கைகளினால் நீதிமன்றத்தில் குற்றவாளிக்கு உரிய தண்டனை பெற்று தந்த டபிள்யு-13 வண்ணாரப் பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் மற்றும் நீதிமன்ற அலுவல் பணிபுரியும் காவல் குழுவினரை உயரதிகாரிகள் பாராட்டினர்.

## அரும்பாக்கம் பகுதியில் மனைவியை தகாத வார்த்தைகள் பேசி தாக்கிய கணவர் கைது

சென்னை, 23 ஆகஸ்ட் 2026: சென்னை, எம்.எம்.டி.ஏ. காலனி பகுதியில் வசித்து வரும் வள்ளி தெய்வானை, பெ/வ.39 என்பவருக்கு திருமணமாகி 16 வயது மகள் உள்ள நிலையில், 2021ம் ஆண்டு இவரது கணவர் இறந்துவிட்ட நிலையில், கடந்த 2025ம் ஆண்டு தேவராஜ் என்பவர் வள்ளி தெய்வானையிடம் உன்னை திருமணம் செய்து கொண்டு, மகளையும் நல்லபடியாக பார்த்துக் கொள்வதாக கூறியதன் பேரில், இருவரும் திருமணம் செய்து கொண்டு ஒரே குடும்பமாக மேற்படி முகவரியில் வசித்து வருவதாகவும், சமீப காலமாக தேவராஜின் நடவடிக்கைகள் சரியில்லாதபோது, அவருக்கு வேறொரு பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது தெரிய வந்த நிலையில், கடந்த 24.07.2026 அன்று தேவராஜ் ஒரு பெண்ணை வீட்டிற்கு அழைத்து வந்து 'இந்த பெண்ணைதான் திருமணம் செய்து கொள்ளப்போகிறேன், நீயும், உனது மகளும் வெளியே போங்க' எனக் கூறி தகாத வார்த்தைகளால் பேசி, கையால் தாக்கி அவமானபடுத்தியதாகவும், மேற்படி தகாத முறையில் நடந்து கொண்டு தாக்கிய கணவர் தேவராஜ் மீது நடவடிக்கை எடுக்கும்படி வள்ளி தெய்வானை என்பவர் கே-8 அரும்பாக்கம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில், பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் (பிஎன்னுஸ் ஆக்ட்) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன் கொடுமை தடுப்பு சட்டம் (டிஎன்பிஹெச் டபிள்யு ஆக்ட்) உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து, போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

கே-8 அரும்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி தேவராஜ், வ/45, பாரததாசன் தெரு, எம்.எம்.டி.ஏ. காலனி, சென்னை என்பவரை நேற்று முன்தினம் (21.08.2026) கைது செய்தனர். கைது செய்யப்பட்ட தேவராஜ் விசாரணைக்குப் பின்னர் நேற்று முன்தினம் (21.08.2026) நீதிமன்றத் தில் ஆஜர் செய்யப்பட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 12,324 கனஅடியாக அதிகரிப்பு: நீர்மட்டம் 85.95 அடியாக உயர்வு

சென்னை 23, ஆகஸ்ட் 2026: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 12,324 கன அடியாக அதிகரித்துள்ள நிலையில், ஒகேனக்கல் காவிரியில் இன்று 7 வது நாளாக பரிசல் இயக்க தடை நீடிக்கிறது. கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி அணை, கடந்த 2 வாரங்களுக்கு முன்பு முழு கொள்ளளவை எட்டியது.

இதையடுத்து, அந்த அணையில் இருந்து உபரிநீர் திறக்கப்பட்டு வருகிறது. கபினியில் உபரிநீர் திறப்பை பொறுத்து ஒகேனக்கல் காவிரி, மேட்டூர் அணைக்கான நீர்வரத்து அதிகரிப்பதும், குறைவதுமாக உள்ளது. ஒகேனக்கல் காவிரியில் கடந்த 4 நாட்களாக, 12,000 கனஅடியாக இருந்த நீர்வரத்து இன்று காலை 10 ஆயிரம் கன அடியாக சரிந்துள்ளது.

அங்குள்ள அருவிகளில் மிதமாக தண்ணீர் கொட்டுகிறது. ஆற்றில் பரிசல் இயக்க விதிக்கப்பட்ட தடை, 7 வது நாளாக இன்றும் தொடர்கிறது.

மேட்டூர் அணைக்கு நேற்று 10,414 கன அடியாக இருந்த நீர்வரத்து, இன்று காலை 11,308 கனஅடியாக அதிகரித்துள்ளது. தொடர்ந்து தற்போது மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 11,308 கனஅடியில் இருந்து 12,324 கன அடியாக அதிகரித்துள்ளது.


அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 2,000 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவை விட, வரத்து அதிகமாக இருப்பதால் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

நேற்று 85.17 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் இன்று காலை 85.95 அடியாக உயர்ந் துள்ளது. நீர் இருப்பு 47.85 டிஎம்சியாக உள்ளது.

கபினி அணைக்கு இன்று காலை நீர்வரத்து 7691 கனஅடியாக இருந்த நிலையில் அணையில் இருந்து வினாடிக்கு 12,940 கனஅடி வீதம் நீர் திறக்கப்பட்டு வருகிறது. கேஆர்எஸ் அணையில் இருந்து 2879 கனஅடி நீர் திறக்கப்படுகிறது.

## போலியான நிறுவனம் நடத்தி நிறுவனத்தின் பெயரில் வாடகையில் இருந்த 34 வீடுகளை, ஆன்லைன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு குத்தகைக்கு கொடுத்து சுமார் 2.11 கோடி பணத்தை அபகரித்து தலைமறைவான பெண் உட்பட இருவர் கைது. மத்திய குற்றப்பிரிவு நடவடிக்கை





சென்னை 23, ஆகஸ்ட் 2026: திருமதி பாத்திமா பீவி என்பவர் கடந்த 2023 ஆம் வருடம் ஓஎல்எக்ஸ் இணைய தளத்தில் வந்த விளம்பரத்தில் இமயம் ஹோம்ஸ் ப்ராப்பர்ட்டி மேனேஜ்மென்ட் என்ற நிறுவனத்தின் உரிமையாளர்களான ஹெலன் ரோஸ் மற்றும் பிரேம் குமார் ஆகியோர் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வாடகை மற்றும் குத்தகைக்கு வீடு கொடுப்பதாக குறிப்பிட்டிருந்ததின் பேரில், பாத்திமாக பீவி நிறுவனத்தின் யூொலை பேசி எண்ணை தொடர்பு கொண்ட போது, வளசரவாக்கம், ஸ்ரீதேவி கார்டன் மெயின் ரோட்டில் உள்ள அலுவலகத்திற்கு வருமாறு அழைத்ததால், அங்கு சென்றதாகவும், ஹெலன் ரோஸ் மற்றும் பிரேம் குமார் ஆகியோர் அவர்களது நிறுவனத்தின் பெயரில் வாடகைக்கு இருந்த மணிகண்டன் என்பவருக்கு சொந்தமான வீட்டினை பாத்திமா பீவிக்கு குத்தகைக்கு கொடுத்து ரூ.7 லட்சம் பணத்தை பெற்றுக் கொண்டதாகவும், ஆனால் எதிரிகள் இருவரும் வீட்டின் உரிமையாளரான மணிகண்டனுக்கு மாத வாடகையை செலுத்தாததால், மணிகண்டன், பாத்திமா பீவியை வீட்டை காலி செய்யுமாறு கூறியதாகவும், பின்னர் விசாரித்ததில் எதிரிகள் ஹெலன் ரோஸ் மற்றும் பிரேம் குமார் ஆகியோர் போலியான நிறுவனத்தின் பெயரில் மணிகண்டனின் வீட்டை வாடகைக்கு எடுத்து, அந்த வீட்டை பாத்திமா பீவிக்கு குத்தகைக்கு விட்டு குத்தகை பணம் ரூ.7 லட்சத்தை ஏமாற்றி தலைமறைவானது தெரியவந்ததாகவும், மேற்படி இருவர் மீதும் நடவடிக்கை எடுத்து பணத்தை மீட்டு தருமாறு பாத்திமா பீவி என்பவர் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அலுவலகத்தில் கொடுத்த புகார் மீது மத்திய குற்றப் பிரிவு, நம்பிக்கை ஆவணங்கள் மோசடி புலனாய்வு பிரிவில் வழக்குப் பதிவு செய்து, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் முனைவர் கி.அமல்ராஜ், இ.கா.ப., அவர்கள் உத்தரவின்பேரில், மத்திய குற்றப்பிரிவு, கூடுதல் ஆணையாளர் அறிவுரையின் பேரில், மத்திய குற்றப்பிரிவு காவல் அதிகாரிகள் வழிகாட்டுதலின் பேரில், நம்பிக்கை ஆவணங்கள் மோசடி புலனாய்வு பிரிவு (இடிஎஃப்-3) காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் மேற்கொண்ட விசாரணையில், ஹெலன் ரோஸ் மற்றும் பிரேம் குமார் ஆகியோர் இமயம் ஹோம்ஸ் ப்ராப்பர்ட்டி மேனேஜ் மென்ட் என்ற பெயரில் போலியான நிறுவனத்தை தொடங்கி நிறுவனத்தின் பெயரில் 34 வீட்டின் உரிமையாளர்களிடம் வீடுகளை வாடகைக்கு எடுத்து, அந்த வீடுகளை வாடிக்கையாளர்களிடம் காண்பித்து அதனை குத்தகைக்கு விட்டு வாடிக்கையாளர்களிடம் ஆன்லைன் மற்றும் வங்கி மூலமாகவும் ரொக்கமாகவும் மொத்தம் சுமார் 2.11கோடி பணத்தை பெற்றுக் கொண்டு, மேற்படி 34 வீட்டு உரிமையாளர்களுக்கும் வாடகை செலுத்தாமலும், குத்தகைதாரர்களுக்கு பணத்தை திரும்ப தராமலும், எதிரிகள் நடத்தி வந்த பொய்யான நிறுவனத்தை மூடிவிட்டு தலைமறைவானது தெரியவந்தது.

நம்பிக்கை ஆவணங்கள் மோசடி புலனாய்வு பிரிவு (இடிஎஃப்-3) காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மேற்கொண்டு, இவ்வழக்கில் தலைமறைவாக இருந்த எதிரிகள் ஹெலன்ரோஸ், பெ/வ.59, க/பெ.சேகர் வில்லியம்ஸ், முருகன் நகர், திருவேற்காடு, சென்னை மற்றும் பிரேம்குமார், வ/50, த/பெ.சுப்பையா, திருமலை நகர் விரிவு, அஸ்தினாபுரம், சிட்லபாக்கம், சென்னை ஆகிய இருவரை நேற்று முன்தினம் (21.08.2026) கைது செய்தனர். இவர்களிடமிருந்து குத்தகை மற்றும் வாடகை ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நேற்று முன்தினம் (21.08.2026) பூந்தமல்லி கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத் தில் ஆஜர் செய்து நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப் பட்டனர்.

## கார் வாங்குவதில் காட்டும் வேகத்தை விவசாயிகளுக்கான நிதியை கொண்டு சேர்ப்பதில் காட்ட வேண்டும்: உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்



சென்னை, 23 ஆகஸ்ட் 2026: கார் வாங்குவதில் காட்டும் வேகத்தை, விவசாயிகளுக்கான நிதியைக் கொண்டு சேர்ப்பதில் காட்ட வேண்டும் என்று உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார். திமுக இளைஞர் அணி செயலாளரும், தமிழக எதிர்க்கட்சி தலைவருமான உதயநிதி ஸ்டாலின் தனது எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது: குறுவை சிறப்புத்தொகுப்பு அறிவிக்கப்பட்டு 2 மாதங்கள் கடந்து விட்ட பிறகும், விவசாயிகளை அது சென்று சேராமல் இருப்பது கடும் கண்டனத்துக் குரியது.

மேட்டூர் அணையில் இருந்து ஜூன் 12ம் தேதி தண்ணீர் திறக்காத காரணத்தால், குறுவை சாகுபடி பொய்த்துவிட்டது- விவசாயிகளுக்கு அரசு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்று பேரவையில் பேசி இருந்தேன். வறட்சி நிவாரணம் பற்றிக் கேட்டதற்கு, குறுவை சிறப்புத்தொகுப்புக்காக நிதி ஒதுக்கியதைப் பற்றி முதல்வர் விளக்கினார். ஆனால், அவர் ஒதுக்கியதாக சொன்ன அந்த நிதியும் இன்று வரை விவசாயிகளைச் சென்றடையவில்லை.

இது தொடர்பான செய்திகள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன. அவற்றை இந்த Inefficient அரசு கவனித்ததா? அல்லது வழக்கம்போல விவசாயிகள் பிரச்னையில் அலட்சியம் காட்டுகிறதா?. எம்.எல்.ஏ.க்களுக்கு கார் வாங்குவதில் காட்டும் வேகத்தை, விவசாயிகளுக்கான நிதியைக் கொண்டு சேர்ப்பதில் இந்த அரசு காட்டியிருக்க வேண்டும். விவசாயிகள் நலனில் அக்கறையின்றி தொடர்ந்து மெத்தனப் போக்கோடு நடந்து கொள்வது ஏற்புடையது அல்ல. குறுவை சிறப்புத்தொகுப்பு நிதி விவசாயிகளுக்குச் சென்று சேர இந்த விவசாயிகள் விரோத அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.